மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எவ்வளவு முக்கியமானது என்பதில் எனக்கு எந்த விதமான ஐயப்பாடும் இல்லை. நான் இதை முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். நமக்கு இருக்கின்ற பணப் பிரச்னையின் காரணமாகத்தான் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னேனேயொழிய, இது தேவையற்றது என்றோ, அவசிய மில்லை என்றோ நான் சொல்லவில்லை. நிதிநிலைமை எப்போது சரியாகின்றதோ, அப்போது நிச்சயமாக இந்த வேலை துவக்கப் படும்.

குமரி மாவட்டத்தில் புதிய பணிமனை

34—(*வினா எண் 8622) டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் புதிதாக பணிமனை ஆரம்பிக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) குமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் இரண்டும், தொடுவட்டியில் ஒன்றும், ஆக மூன்று பணிமனைகளை ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. தகுதியான நிலம் கையகப்படுத்தப்பட்டபின் பணிமனை கட்டப்படும். இது கேள்வி கேட்ட நேரத்திலே இருந்த நிலை.

இப்போது இன்னொரு பணிமனை கூடுதலாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திங்கள் சந்தையில் ஒன்றும், தொடுவட்டியில் ஒன்றும், நாகர்கோவிலில் இரண்டும், ஆக மொத்தம் 4 பணிமனைகள் அமைக்கப்பட இருக்கின்றன.

அபிராமம்—முதுகுளத்தூர் சாலையில் பரளையாற்றின் குறுக்கே பாலம்

35—(*வினா எண் 8930) திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அபிராமம்—முதுகுளத்தூர் சாலையில் பரளை யாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.